| | | |
|---|---|---|
| சாட்சி :DW1<br>மணிவேல் த/பெ.செல்வாதிக்க அனந்தர் | அ.வ.எண்.11/2021 | 08.04.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் வாங்கிய இடம் அவர்களுக்கு சேர்ந்தது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து வீடா, நிலமா என்றால் கொட்டகை மற்றும் பாத்ரூம் உள்ளது. தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியபட்டது என்றால் வெள்ளையம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தின் சர்வே எண்.256 ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லை விவரம் என்னவென்றால் வடக்கில் வாரி, தெற்கில் வாதி ரெங்கநாயகி வீடும், மேற்கில் ரெங்கராஜின் மகனும், கிழக்கில் எனது இடமும் உள்ளது. வழக்கு நான்கு அயிட்ட சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வீரகவுண்டர் அவரது மருமகள் வெள்ளையம்மாளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி ஆவணத்தை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரெங்கநாயகி தாவா சொத்து அவருக்கு சேரும் என்று சொன்னதால் தாக்கல் செய்துள்ளேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 02.06.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.